9 SEP 2019

தமிழ்நாடு தொடக்கக் கல்வி ... சென்னை-600 006

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2017–18–ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண்.9–ன்படி, முதற்கட்டமாக, 19,427 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத தற்காலிக பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக மாற்றியமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (பக5(1)) துறை

அரசாணை (நிலை) எண்.157

நாள் 05.09.2019
(திருவள்ளுவராண்டு 2050,
விகாரி, ஆவணி 19 )

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.525, பள்ளிக் கல்வித் (டி.1) துறை, நாள் 29.12.1997.
2. அரசாணை ((நிலை) எண்.231, பள்ளிக் கல்வித் (சி.2) துறை, நாள் 11.08.2010.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.53740/எல்/இ3/ 2017, நாள் 07.8.2017 மற்றும் 30.11.2017.
4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.011671/கே.4/2017, நாள் 08.07.2017 மற்றும் 13.07.2019.
5. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 4982/அ1/17 நாள் 20.09.2017.

.........

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், பணியாளர் நிர்ணயம் செய்வது குறித்த நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் படி, ஆசிரியர் : மாணவர் எண்ணிக்கையின்படி, தொடக்கநிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், பணியாளர் நிர்ணயம் செய்ய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. இதற்கிடையில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 15.06.2017 அன்று நடைபெற்ற பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

அறிவிப்பு எண். 9.

தற்காலிக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக மாற்றுதல் :–

"பள்ளிக் கல்வித் துறையில் உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் நிரந்தர பணியிடங்களாகவும் தற்காலிக பணியிடங்களாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் தற்காலிக பணியிடங்களுக்கு பணியிட தொடர் நீட்டிப்பு வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முதற்கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி **17,000 தற்காலிகப் பணியிடங்கள் நிரந்தர பணியிடங்களாக மாற்றப்படும்**."

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 24 | அரசாணை (நிலை) எண்.179, பள்ளிக் கல்வி (ஆர்.1) துறை, நாள் 03.06.1998. | அரசாணை (1டி) எண்.433, பள்ளிக் கல்வி (தொ.க.3(2)) துறை, நாள் 13.06.2018 01.01.2018 முதல் 31.12.2020 வரை | 1.கண்காணிப்பாளர்–9<br>2.உதவியாளர்–3<br>3.இளநிலை உதவியாளர் இணைந்த தட்டச்சர்–3 |
| | அரசாணை (நிலை) எண்.857, கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, 23.05.1981 | அரசாணை (1டி) எண்.416, பள்ளிக் கல்வி (தொ.க.3(2)) துறை, நாள் 04.06.2018 01.01.2018 முதல் 31.12.2020 வரை | 1.இயக்குநர்–1<br>2.முதன்மைக் கணக்கு அலுவலர்–1<br>3.கண்காணிப்பாளர்–7<br>4.நேர்முக உதவியாளர்–1<br>5.உதவியாளர்–34<br>6.தட்டச்சர்–399<br>7.உதவி தொடக்கக் கல்வி அலுவலர்–366<br>(• இந்த பணியிடம் அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வி (வரவு–செலவு–1) துறை, நாள் 18.05.2018–ன்படி வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடமாக மாற்றப்பட்டது)<br>8.இளநிலை உதவியாளர்–367<br>9.அலுவலக உதவியாளர்–8<br>10.ஓட்டுநர்–1 |
| | அரசாணை (நிலை) எண்.432, பள்ளிக் கல்வி (ஆர்.1), துறை, நாள் 09.12.1998 | அரசாணை (நிலை) எண்.413, பள்ளிக் கல்வி (தொ.க.3(2)) துறை, நாள் | 1.ஆய்வு அலுவலர் (உதவி தொடக்கக் கல்வி அலுவலர் நிலையில்)–29<br>(•இந்த பணியிடம் |